1971 டிசம்பர் 14]

DR. H. V. HANDE: May I know whether it is a fact that some top Officers like the Chief Record Section Officer of the Co-operative Stores and Chief Officer of the Food and Agriculture Department—Chief Promoter—were involved in this and whether it is a fact that Rs. 100 was collected from each of the members or constituents and the amount is not returned even though the amount is due? When they were not getting these houses—now according to the Minister himself there was cheating—may I know whether it is possible for the Government to see without waiting for the Supreme Court's or High Court's Judgment to return the amount to the persons who are involved because some of them have also retired?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இதில் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த 5 பேர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். உணவு விவசாய இலாகாவைச் சேர்ந்த கே. ஆர். சுப்பிரமணியம், எம்.வி. கோதண்டம், எம்.பி. இராமச்சந்திரன், பொதுத் துறையைச் சேர்ந்த ராஜேந்திரலால், கிராம உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அப்பன்லால் ஆகிய இவர்களைத் தவிர கனம் உறுப்பினர் சொன்னதைப்போல மற்றவர்கள் சம்பந்தமாக ஒன்றும் இருப்பதாகத் தகவல் இல்லை.

DR. H. V. HANDE: I meant the same K. R. Subramaniam, **Food and Agriculture Department—Promoter. But may I know** whether it is possible to return the amount because many of them have retired and they have already given the amount—Rs. 100 and odd? I want to know whether it is possible without waiting for the judgment to reimburse the amount or return the amount taken from them.

THE HON. THIRU K. RAJARAM: The books are lying with the Court. Without it, it is not possible for the Society to return the amount at all.

சீட்டு நிதிகள்

* 388 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீட்டுக் கம்பெனிகளை ஒழுங்குபடுத்தப் புதிய சட்டம் இயற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை

திரு. என். கிட்டப்பா: இப்படித் தனியார் லைசென்சு பெற்று நடத்தப்படுகிற சீட்டுக் கம்பெனிகளால் மக்கள் மோசம் செய்யப்பட்டு நட்டமடைகிறார்கள். ஆகவே, அரசாங்கமே சீட்டுக் கம்பெனிகளை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அப்படிப்பட்ட உத்தேசம் இன்றைக்கு இல்லை. எங்காவது தவறு நடந்தால் தகவல் கொடுக்கலாம். தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சிட்டு, மணி லெண்டிங், பான் ப்ரோக்கர்கள் ஆகியவற்றுக்கு மூன்று சட்டங்கள் இருக்கின்றன. அவற்றை அமலாக்குவதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதனுல் அந்தச் சட்டங்களுக்கு சரியான திருத்தங்களைக் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்தச் சட்டங்களுக்கு எத்தகைய திருத்தங்கள் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லலாம். அந்தச் சட்டங்கள் புதியதாகக் கொண்டுவரப்பட்டன. அனுபவத்தின் பேரில்தான் அதில் உள்ள சிக்கல்கள் அகற்றப்பட வேண்டும்.

திரு. என். கணபதி : இப்போது இருக்கிற சீட்டுக் கம்பெனி சட்டத்தின் கீழ் 25 உறுப்பினர்களைக் கொண்டு ஒரு சிரிஸ் என்ருல் ஒரு உறுப்பினர் தொகையை மாத்திரம் டெபாசிட் பண்ணிஞல் போதும் என்று இருக்கிறது. பாக்கி 24 பேர்களுக்கு எந்தவிதமான செக்யூரிடியும் இல்லை. ஆகவே, செக்யூரிடி தொகையை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்தச் செக்யூரிடி 3 வகையாக வாங்கப்படுகிறது. ஒன்று, சீட்டு கம்பெனி செக்யூரிடி இண்டன்ஜர் ஆப் மார்ட்கேஜ் அண்டு டிரஸ்ட் மூலம் செலுத்தலாம். அல்லது அரசுப் பத்திரங்களின் மூலம் செலுத்தலாம். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளில் செலுத்தலாம்.

திரு. என். கணபதி : நான் செக்யூரிடி தொகையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. குறைவாக இருப்பதனுல்தான் மோசடி நடைபெறுகிறது என்பதற்கு ஆதாரம் இல்லை.

திரு. எஸ். வடிவேல் : கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்கள் பெரிதும் ஏமாற்றப்படுகிருர்கள். ஆகவே, சீட்டுக் கம்பெனிக்கே லைசென்சு கொடுக்காமல் இருப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குச் சட்டம் இருக்கிறது. 25 ரூபாய் கட்டி லைசென்சு பெற்று நடத்துகிருர்கள். லைசென்சு வாங்காது நடத்துகிறவர்களால் மோசடி நடைபெறக் கூடும். அதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : When we are thinking of progressive financial reforms in this country, is it not better to abolish this sort of short-cuts to prosperity by having chit funds and usurious interest by the system of Hundies and all that?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.